ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1979/39 - 2016 අගෝස්තු මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.08.11

*1979/39 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாண மாகாண சபை

ஊவா மாகாண மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஊவா மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் அவர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும் ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான (திருத்த) நியதிச் சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண மாகாண சபையால், 2016.07.14 ஆந் திகதி சம்மதிக்கப்பட்டு, 2016, யூலை மாதம் 14 ஆந் திகதி, ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க,
செயலாளர்,
ஊவா மாகாண மாகாண சபை.

ஊவா மாகாண மாகாண சபை அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை,
2016, ஓகத்து 08.

**2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஊவா மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அங்கத்தவர்களுக்கும் வேதனம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான (திருத்தப்பட்ட) சட்டம்**

ஊவா மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு வேதனம் மற்றும் கொடுப்பனவு செலுத்துவது தொடர்பான திட்டம் 2010 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, மாகாண சபை வேதனம் மற்றும் கொடுப்பனவு செலுத்துவதற்கான திருத்தப்பட்ட சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

சுருக்கப் பெயரும் மற்றும் செயற்படும் திகதியும்.

1. இந்த சட்டம் 2016 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, ஊவா மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் வேதனம், கொடுப்பனவு செலுத்துவதற்கான திருத்தப்பட்ட சட்டம், என அறிமுகப்படுத்தப்படுவதுடன், ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்களுடைய அனுமதி கிடைத்த நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

ஊவா மாகாணத் தின் பொது சேவைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு மற்றும் அங்கத் தவர்களுக்கான கொடுப்பனவுகள்.

2. இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியும் அதற்கு பின்பு,

(அ) ஊவா மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் தலைவரின் மாதாந்த ஊதியம் முப்பத்திஐயாயிரம் (ரூபா 35,000) ரூபாவாகும் ;

(ஆ) ஊவா மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் மாதாந்தக் கொடுப்பனவாக இருபதாயிரம் (ரூபா 20,000) ரூபாவாக 2016.01.01 ஆந் திகதி முதல் செலுத்த வேண்டும்.

ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தல் மாகாண சபை நிதியத் திற்கு பொறுப் பானதாகும்.

இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஊவா மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு மற்றும் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகளை ஊவா மாகாண சபை நிதியத்திற்கு பொறுப்பானதாகும்.

ஏதாவது சிக்கல்கள் ஏற்படுமாயின் அப்போது சிங்கள மொழி மூலமானதே ஏற் றுக்கொள்ளப்படும்.

நடைமுறைப்படுத்தப்படும் இச்சட்டம் சிங்களம், தமிழ் மொழிகளின் போது ஏதாவது சிக்கல் ஏற்படுமாயின் சிங்கள மொழியில் உள்ளதுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

8- 766

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.